இதற்கு எங்களுக்கு வழி

களுக்கு உணவு வழங்கு

சிறப்பித்தனர்.

# தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம்!

கோவை,செப்.9–

உலக டுசின் தசைசிதைவு விழிப்புணர்வு தினம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 7–ம் தேதி உலக அளவில் கடைபிடிக்கப்படுகிறது. இத்தினம் தமிழ்நாட்டில் கோவையில் இயங்கிவரும் மரபணு பரிசோதனை ஆதரவு மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2014–ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த வருடத்தை போன்று இவ்வருடமும் இணையம் மூலமாக குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள், சிறப்பு விருந்தினர்கள், மருத்துவ குழு உறுப்பினர்கள், நண்பர்கள், ஊழியர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து செப்டம்பர் 7–ம் தேதி முதல் 9–ம் தேதி வரை மூன்று நாள் விழா நடைபெற்றது.

செப்டம்பர் 7–ம் தேதி காலை 9 மணிக்கு கடந்த வருடங்களின் முன்னோட்ட வீடியோவுடன் தொடங்கப்பட்ட இவ்விழா மாலை 7 மணிக்கு நீயா நானா புகழ் கோபிநாத் சிறப்புரை மற்றும் அதை தொடர்ந்து டாக்டர்.லெட்சுமி, தேவி (மனநலநிபுணர்), டாக்டர் நூருல் அமின் ஷாஹித் மற்றும் 400 பார்வையாளர்கள் வரை கலந்து கொண்டு கேள்வி பதில் கலந்துரையாடலுடன் முடிவு பெற்றது.

இவ்வருடம் தசைசிதைவு தினத்தின் நோக்கம் தசைசிதைவு இளைஞர்களின் வாழ்வியல் செப்டம்பர் 8–ம் தேதி காலம் காத்திரு காயம் பொறுத்திரு என்ற குறும்படம் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டது. தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்ட இளைஞரின் குடும்பத்தில் நிகழும் சில உணர்வுகள் மிக அழகாக இப்படத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நோய் பாதிப்பை தாண்டி இச்சமூகத்திற்கு முன்மாதிரியாக தங்கள் வெற்றி பயணத்தை குறித்து சில இளைஞர்களின் பதிவும் மற்றும் தங்கள் வாழ்க்கை பயணத்தில் தங்கள் கனவுகளையும், சந்தித்துகொண்டிருக்கும் தடைகளையும் சில இளைஞர்கள் பகிர்ந்துள்ள வீடியோவும் இணையத்தில் பதிவேற்றப்பட்டது.

செப்டம்பர் 9–ம் தேதி தசைசிதைவு நோயால் பாதிக்கப்பட்டசிறு குழந்தைகளின் கொரோனா பற்றிய விழிப்புணர்வுகள், ஓவியங்கள், கையால் செய்யப்பட்ட மாதிரிகள் அவர்களின் திறமைகள் அதற்கு ஊக்குவிப்பர்வர்களை பற்றிய வீடியோ பதிவுகள் மற்றும் அவர்களின் அழகான புகைப்பட பதிவேற்றப்பட்டது.

# தாய் மற்று
# 4 ஆண்டு

ஊட்டி, செப். 9–

ஊட்டி நொண்டி மேடு பகுதியை சேர்ந்த விசாலாட்சி (49) மகன்கள் உதயகுமார் (28) . ரஞ்சித்(30)

# புலியகுளம் முந்தி விநாயகர் கோவிலில்